2023 மார்ச் 24]
32—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***39040—திரு. A.G. வெங்கடாசலம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா——

அந்தியூர் தொகுதி, அந்தியூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அந்தியூர் தொகுதி அமைந்துள்ள ஈரோடு மாவட்டத்தில் ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, 2 அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 12 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மேலும், இந்த ஆண்டு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.*

திரு. A.G. வெங்கடாசலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் 10 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்தும், 15 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலிருந்தும் ஆண்டுதோறும் 1,500 மாணவ, மாணவிகள் மேற்படிப்பிற்காக வெளியேறுகின்றனர். அந்தியூர் தொகுதியில், ஒரே ஒரு தனியார் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மட்டுமே, அந்தியூரிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ளது. கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அமைக்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்-நாங்களெல்லாம் கல்லூரியில் படிக்க முடியுமா என ஒரு காலத்தில் ஏங்கிக் கொண்டிருந்தோம். பர்கூர்*

[2023 மார்ச் 24

மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினர், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, வறுமையில் மிகவும் கஷ்டப்பட்டுவரும் குடும்பங்களைச் சேர்ந்த 240 மாணவ, மாணவிகள் தற்போது படித்து வருகின்றனர். உயர் கல்வி படிக்க இயலாதவர்கள் தொழில் கல்வி பயின்று வேலைக்குச் சென்றோ அல்லது சொந்தமாகத் தொழில் செய்தால்தான் குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்கிற நிலையில் உள்ள பர்கூர் மலைவாழ் பழங்குடியினர், தாழ்த்தப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மாணவர்கள் படிப்பதற்கு அவசியம் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி தேவைப்படுகிறது. ஆகையால், அந்தியூர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை கருணையோடு வழங்கி, மலைக் கிராமங்களிலுள்ள மாணவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட உதவ வேண்டும் என அந்தியூர் தொகுதி மலைவாழ் மக்களின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கு அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் இரண்டும், 12 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் இருக்கின்றன. இதில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1,150 ஆகும். ஆனால், இந்த ஆண்டு சேர்ந்திருப்பவர்களுடைய எண்ணிக்கை 438. இவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன. முதலில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அந்த காலியிடங்களையெல்லாம் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யட்டும். வருகின்ற காலங்களில் தேவை ஏற்படின் அதுபற்றி யோசிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம் அவர்கள்.*

திரு. A.G. வெங்கடாசலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் கொங்காடை மலைப் பகுதியிலிருந்து அந்தக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், 100 கி.மீ. தொலைவிற்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அங்கே இருக்கின்ற மாணவர்களுடைய சூழ்நிலை, குடும்பச் சூழ்நிலை, காரணமாக*

2023 மார்ச் 24]

அவ்வளவு தூரம் அவர்கள் வந்து படிக்கக்கூடிய நிலை இல்லை. அந்தியூரில் கல்லூரி இருந்தால், அந்த மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். ஆதலால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து, பர்கூர் மலைவாழ் மக்கள் 100 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்த நிலையைக் கருத்தில்கொண்டு, அந்த மாணவர்களின் வாழ்க்கைத் தரம் உயர இதனைப் பரிசீலித்து கண்டிப்பாக ஆவன செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இங்கேயிருக்கிற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். பாலிடெக்னிக் கல்லூரிகளில் இப்போது சேர்க்கை குறைவாகத்தான் இருக்கிறது. 6,295 என்கிற மொத்த இடங்களில், 3,084 இடங்கள் காலியாக இருக்கின்றன. இதை அறிந்துதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாலிடெக்னிக் கல்லூரிகளின் தரத்தை உயர்த்த வேண்டும், சேர்க்கையை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.*

தொழில் துறை 4.0 தரத்திற்கு ஏற்ப, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை திறன்மிகு மையங்களாக மாற்றும் திட்டத்தை வரும் ஆண்டில் அரசு தொடங்கும். அதுமட்டுமல்ல, மேலும், "தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும், பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, உலகத்தரம் வாய்ந்த திறன்பயிற்சியை வழங்குதல், திறமையான பணியாளர்களை உருவாக்குதல் போன்ற நோக்கங்களுடன் 120 கோடி ரூபாய் செலவில் சென்னை, அம்பத்தூரில் 'தமிழ்நாடு உலகளாவிய புதுமை முயற்சிகள் மற்றும் திறன் பயிற்சி மையம்' அமைக்கப்படும். இந்த மையத்தில், இயந்திர மின்னணுவியல், இணையவழிச் செயல்பாடு, அதிநவீன வாகனத் தொழில்நுட்பம், துல்லியப் பொறியியல் மற்றும் உயர்தர வெல்டிங் போன்ற தொழில்நுட்பங்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்படும்" என்று நிதிநிலை அறிக்கையிலேயே அறிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களும் இதைப் பற்றி

ஆலோசித்து, இந்த பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் திறனை வளர்க்க வேண்டும்; அங்கே பயில்கின்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, நிதிநிலை அறிக்கையிலேயே இவையெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு அவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து, வருகின்ற காலங்களில் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியில் அரசு I.T.I. இருக்கின்றது; அரசு கல்லூரி இருக்கின்றது; ஆனால், அரசு பாலிடெக்னிக் இல்லை. 4 இலட்சம் பேர் கர்நாடகா பார்டரில் உள்ள என்னுடைய தொகுதியில் வாழ்கிறார்கள். அதனால் நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மறுக்காமல் இதனைச் செய்யவேண்டும். கர்நாடகா பார்டரில், சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற மேட்டூர் தொகுதி பெரிய தொகுதி. அந்தத் தொகுதியில் மாணவ, மாணவிகள் அதிகமாக இருக்கிறார்கள். (குறுக்கீடு) நம்முடைய மூத்த அமைச்சர் அவர்கள் கையை ஆட்டுகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சதாசிவம், நீங்கள் துணைக் கேள்வியாக, 'இந்த ஊரில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படுமா' என கேட்கலாம். அதுதான் கேள்வி. கேட்டுவிட்டு, அமருங்கள்.*

திரு. S. சதாசிவம்: *மேட்டூர் தொகுதியில், அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்துக் கொடுக்குமாறு நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கேள்விக்கு பதில் அளிக்கின்றபோதே நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். தமிழகத்திலேயே பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கான ஆர்வம்*

2023 மார்ச் 24]

குறைந்திருக்கிறது. அதை அதிகப்படுத்துவதற்கு. . . (குறுக்கீடு) மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே இந்த சிறப்பம்சங்களையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலெல்லாம் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அவற்றில் வேலைவாய்ப்பு பெறுகின்ற வாய்ப்புகளை இந்த பாலிடெக்னிக் கல்லூரிகளில் உருவாக்குவோம் என்று சொன்னால், வருகின்ற காலங்களில் மாணவர்களுடைய எண்ணிக்கை உயரும். அந்த எண்ணிக்கையின் உயர்வைப் பொறுத்து, புதிய கல்லூரிகள் துவங்குவதைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் பொதுவாக, தெளிவான பதில் சொல்லிவிட்டார்கள். வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

33—

சுற்றுலா மாளிகை

***1303—திரு. மா. செந்தில்குமார்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதிய சுற்றுலா மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 2022 ஆம் நிதியாண்டில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் திரு. க. கார்த்திகேயன் அவர்களும், திரு. தா. உதயசூரியன் அவர்களும் ஒரு கடிதம் தந்தார்கள். கள்ளக்குறிச்சி மாவட்டம் என்பது புதியதாக உருவாக்கப்பட்ட ஒரு மாவட்டம் என்பதால், அந்த மாவட்டத்தில் ஒரு சுற்றுலா